# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
## <u>கூட்டப்பொருள்</u>

2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 29.09. 2021 | **1)** தூத்துக்குடி மாநகராட்சி, நகராட்சியாக இருந்த பொழுது புது பஸ்டாண்டு அருகே புதிதாக ஆடு அடிக்கும் கூடக் கட்டிடம் கட்டுவதற்காக 16.07.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு 23.11.2007 அன்று கட்டிடம் கட்டி முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு வந்தது. இதனுடைய மதிப்பு ரூ. 20 லட்சமாகும். இக்கட்டிடம் இன்று வரை பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.<br>தற்பொழுது தூத்துக்குடி மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி பணியானது மிகவும் துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது. இதில் புது பஸ்டாண்டு அருகே அரசுப் பேருந்துகளுக்கான பஸ்டிப்போ ரூ. 9.00கோடி மதிப்பீட்டில் ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் கட்டுவதற்கான பணி நடைபெற இருக்கிறது. இதில் முதற் கட்டமாக புது பஸ்டாண்டு அருகே உள்ள ஆட்டிறைச்சிக் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி அவ்விடத்தில் பஸ்டிப்போ கட்டுவதற்காக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே புது பஸ்டாண்டு அருகே பஸ்டிப்போ கட்டுவதற்காக ரூ. 9.00 கோடி மதிப்பீட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பணியினை தொடங்குவதற்காக ஆடு அடிக்கும் கூடக் கட்டிடத்தை இடிப்பதற்கான பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>அ) மாமன்றம் அனுமதிக்கலாம். இ5/3491/2021 | 82)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 2)தூத்துக்குடி மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண். 32 தெற்கு காட்டன் ரோடு, கதவு எண். 59சி சொத்து வரி விதிப்பு எண். 138/032/01710ன் வரிவிதிப்பாளர் மெசர்ஸ். பொன்செல்வம் டிரேடர்ஸ் நிறுவனம் 2019ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுவதன் காரணமாக, மேற்படி நபருக்கு பாத்தியப்பட்ட சொத்து வரிவிதிப்பிற்கு 1998–99 இரண்டாம் அரையாண்டு முதல் 2018–2019 இரண்டாம் அரையாண்டு வரை ரூ.5,98,210/– (ஐந்து இலட்சத்து தொண்ணூற்றாயிரத்து இருநூற்று பத்து) மாநகராட்சி அலுவலகத்தில் 26.03.2019ல் செலுத்திய பின்பு தடையில்லா சான்று பெற்று தேர்தலில் போட்டியிட்டுள்ளார். மேற்படி சொத்து வரிவிதிப்பின் கட்டடம் முற்றிலும் இடித்து காலிமனையாக்கப்பட்டு 2007ம் ஆண்டு முதல் தனித்தனியாக காலிமனை விற்பனை செய்யப்பட்டதில், இவ்வலுவலகம் மூலம் 139 புதிய சொத்து வரிவிதிப்பு எண்கள் நிர்ணயம் செய்யப்பட்டு அரையாண்டு வரித்தொகையாக மொத்தம் ரூ 1,72,246/– ஐ (ஒரு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து இருநூற்று நாற்பத்தாறு) | 83)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இவ்வலுவலகம் மூலம் நாளது தேதி வரை வசூல் செய்யப்பட்டு வருகிறது. இச்சுழலில் மேற்படி சொத்து வரிவிதிப்பு எண். 138/032/01710க்கு தற்போது வரை ரத்து செய்யப்படாமல் கணிணியில் தொடர்ச்சியாக கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது.<br>எனவே ரத்து செய்யப்பட வேண்டிய சொத்து வரிவிதிப்பிற்கு 26.03.2019ல் மேற்படி வரிவிதிப்பாளரால் செலுத்தப்பட்ட தொகை ரூ. 5,98,210/—ல் ஐந்து இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து இருநூற்று பத்து) 1998—1999 இரண்டாம் அரையாண்டு முதல் 2007—2008 இரண்டாம் அரையாண்டு வரை ரூ. 2,29,390/— நீங்கலாக மீதமுள்ள 2008—09ம் அரையாண்டு முதல் 2018—2019 இரண்டாம் அரையாண்டு வரை ரூ.3,68,820/—ஐ (மூன்று இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்) மேற்படி வரிவிதிப்பாளருக்கு திரும்ப வழங்கிடவும், மேற்படி வரிவிதிப்பிற்கு தற்போது கணிணி பதிவில் 2019—20 முதலாம் அரையாண்டு முதல் 2021—22 இரண்டாம் அரையாண்டு வரை உளள தொகை ரூ. 81,750/—ஐ (எண்பத்தொன்றாயிரத்து எழுநூற்று ஐம்பது) கணினி பதிவிலிருந்து முழுமையாக நீக்கம் செய்து, மேற்படி சொத்து வரிவிதிபு எண். 138/032/01710 ஐ ரத்து செய்திட மாமன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.அ1/0620/2020 (கிம) | |
| | 3)தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட, வார்டு எண். 3ல் அமைந்துள்ள முத்தம்மாள் காலனி நகரின் மிக தாழ்வான பகுதியாக இருப்பதால் மழைக்காலங்களில், மழைநீர் அதிக அளவில் தேக்கம் அடைகிறது. மேலும் அதிக அளவில் மழைநீர் சாலைகளில் தேங்குவதால், சாலைகள் மிகவும் சேதமடைந்து பொது போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாகவும், அடிக்கடி விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும் சாலைகள் குண்டும், குழியுமாக இருப்பதால், மழைக்காலங்களில் நீர் தேங்கி பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதிட மேற்படி பகுதியில் தார்ச்சாலை அமைக்கும் பணி அவசியமாகிறது. மேற்படி பணியினை ரூ. 46.75 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொது நிதி 2021—22ம் ஆண்டு பணியாக மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | 84)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |
| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
| 1 | வடக்கு மண்டலம் முத்தம்மாள் காலனி 3வது தெரு மேற்கு தார்ச்சாலை அமைக்கும் பணி | 46.75 |
| | மொத்தம் | 46.75 |
| | **அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.இ2/03943/2021 | |

| | | |
|---|---|---|
| | **4)** தொலை நோக்கு திட்டம் **2031**ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கும் பணியினை தரமான முறையில் மேற்கொள்ள ஏதுவாக பின்பற்றவேண்டிய விதிமுறைகள், சாலை பணிகள் மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படவேண்டிய கட்டுமான பொருட்களின் தரம் ஆகியவற்றை முறையாக கண்காணித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட சாலைகளை பேருந்து போக்குவரத்து சாலை, தெரு மற்றும் சந்து என மூன்று இனங்களாக வகைப்படுத்திட மாநகராட்சி வரைபடத்தில், மூன்று வித வண்ணங்களில் குறியீடு செய்து சாலைகளுக்கு வரிசை எண்கள் கொடுக்கும் பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சி எல்கைக்குட்பட்ட சாலைகள அளவீடு செய்து சாலையின் நீளம் அகலம் மற்றும் சாலையின் தன்மை ஆகியனவற்றை மாநகராட்சி இணைய வழியில் பதிவேற்றம் செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சாலையின் நீளம் அகலம் மற்றும் சாலையின் தன்மை ஆகியன குறித்த விவரங்களை GIS கூகுள் டோரான் புகைப்பட கருவி மூலம் கண்டறிந்து தரவு தளம் ( Data Base ) தயார் செய்திடும் பணியினை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகிறது. மேற்படி பணியினை ரூ. **25.00** லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொது நிதி **2021–22**ம் ஆண்டு பணியாக மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | **85)**அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
| **1** | பொதுநிதி பணிகள் – தொலைநோக்கு திட்டம் **2031** –கூகுள் டோரான் கேமிரா மூலம் சாலையின் நீளம், அகலம் மற்றும் சாலையின் தன்மை குறித்து கண்டறிந்துதரவு தளம் ( Data Base ) தயார் செய்திடும் பணி | **25.00** |
| | மொத்தம் | **25.00** |
| | **அலுவலகக் குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண். இ2/04252/2021 | |
| | **5)** இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொதுநிதி திட்ட பணியில் தூத்தக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட அய்யர்விளை பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்றும் பொருட்டு நீர்த்தேக்கத்தொட்டி மின்மோட்டார் அறை மற்றும் நீர் வெளியேற்றும் குழாய் அமைக்கும் பணிக்கு ரூ. **22,00,000/–** மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு **01.09.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கு வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி உறை **01.09.2021** அன்று **3.30** மணிக்கு திறக்கப்பட்டது.<br><br>1) M/s. John Construction Thoothukudi<br>மதிப்பீட்டை விட **0.52** % குறைவு (ரூ.**18,44,363.00**) | **86)**அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2) Thiru. G. Parthiban<br>மதிப்பீட்டை விட 0.04 % குறைவு (ரூ.18,53,229.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.52 குறைவான தொகை ரூ. 18,44,363,00 (GST இல்லாமல்) கொடுத்துள்ள M/s. John Construction Thoothukudi என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மதிப்பீட்டை விட 0.52% குறைவாக கொடுத்த M/s. John Construction Thoothukudi ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>File No E2/03486/2021 | |
| | 6) இம்மாநகராட்சி நகராட்சியாக இருந்து 05.08.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது அருகில் உள்ள தூத்துக்குடி ரூரல், சங்கரப்பேரி, மீளவிட்டான், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய 5 பஞ்சாயத்துகள் சேர்க்கப்பட்டது. அப்போது இம்மாநகராட்சியில் 51 வார்டுகள் மற்றும் பஞ்சாயத்துகள் பகுதிகள் சேர்த்து 60 வார்டுகள் உள்ளடங்கியதாகும். மாநகராட்சிக்கான அடிப்படை பணிகளுக்கு தேவையான பணியாளர்கள் அரசிடமிருந்து அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் மாநகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள போதிய நிரந்தர துப்புரவு பணியாளர்கள் இல்லாத நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 24100/பி3/2017 நாள் 31.10.2017ன்படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் ஏற்படும் காலி இடங்களை தனியார் மூலமாக மாமன்ற அனுமதியுடன் 2000ன்படி ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி ஏதும் பெற தேவை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட பணியிடம் மற்றும் இதர பணிகளுக்கு தேவையான பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தினக்கூலியின் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். | 87)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| வ.எண் | பணியிட விபரம் | பணியாளர் எண்ணிக்கை | ஒருநாள் ஊதியம் ரூ. | 6 மாத ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர்கள் | 630 | 354 | 4,01,43,600 /– |
| 2 | கம்போஸ்ட் சூப்பர்வைசர் | 1 | 400 | 72,000/– |
| 3 | டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் | 400 | 320 | 2,30,40,000/– |
| 4 | மேற்பார்வையாளர்கள் | 70 | 400 | 50,40,000/– |
| 5 | வாகன ஓட்டுனர்கள் | 169 | 426 | 1,29,58,920/– |
| 6 | தூய்மை காவலர்கள் | 20 | 481 | 17,31,600/– |
| 7 | சுகாதார பிரிவு கணினி இயக்குபவர் | 19 | 481 | 16,45,020/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | நகர சுகாதார செவிலியர் | 3 | 11000(மாதம்) | 1,98,000/— |
| 9 | வாகன மேற்பார்வையாளர் | 1 | 437 | 78,660/— |
| 10 | பள்ளி கழிவறை பராமரிப்பு தூய்மைப் பணியாளர்கள் (கல்வி நிதி) | 37 | 354 | 23,57,640/— |
| 11 | போட்டோகிராபர் | 1 | 633 | 1,13,940/— |
| | **மொத்தம்** | **1351** | | **8,73,79,380/—** |

மேற்படி பணியிடங்களுக்கான அனுமதி 30.09.2021 உடன் நிறைவு பெறுகிறது. எனவே மேற்படி பணியிடங்களின் அவசர அவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி தொடர்ந்து பொது சுகாதார பணிகள் எவ்வித தடையின்றி நடைபெற ஏதுவாக மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணியாளர்களை 01.10.2021 முதல் 31.02.2022 முடிய உள்ள காலங்களில் பணியமர்த்திக்கொள்ள அனுமதிக்கவும், மேலும் அதற்குரிய உத்தேச செலவினம் ரூ 9.00 கோடிக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

01.10.2021 முதல் 31.02.2022 வரை நகர்ப்புற வாழ்வாதார மையம் ( GLC ) மூலம் பணியாளர்களை பணியமர்த்திக்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ. 9.00 கோடிக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். எச்1/296/18

**7)** தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட வார்டு பகுதிகளின் தெருக்களில் உள்ள மின் கம்பிகளில் தெருவிளக்குகள் இல்லாமல் இருப்பதால் இரவு நேரங்களில் பொது மக்கள் சென்று வர மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனை ஆய்வு செய்து உடன் தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்க ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியதன் பேரில் கீழ்க்கண்ட தெருக்களில் உள்ள மின் கம்பங்களில் புதிய தெருவிளக்குகள் அமைக்கவும், மின் வாரியத்திற்கு உரிய விண்ணப்பம் செய்து நடவடிக்கை எடுக்கவும் இதற்காகும் மின்வாரிய மதிப்பீட்டு கேட்பு தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தவும் மாமன்ளறத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

88) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண் | தெருவின் பெயர் | சாலையின் அகலம் | வார்டு எண் | மின்வாரிய பிரிவு அலுவலகம் | புதியதாக மின்வாரியம் மூலம் அமைக்கவேண்டிய விளக்குகள் | | மொத்த விளக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | With Pole & SL | SL only | |
| 1 | ராம் நகர் 4வது தெரு | 30 அடி | 1 | கீழூர் | | 3 | 3 |
| 2 | கேடிசி நகர் கிழக்கு பகுதி | 30 அடி | 5 | | | 9 | 9 |
| 3 | சக்திவிநாயகர்புரம் | 20 அடி | 6 | | | 4 | 4 |
| 4 | திரவியபுரம்1வது தெரு (பக்கிள் ஓடை வடபுறம் ரோடு) | 30 அடி | 13 | | 6 | 3 | 9 |
| 5 | பாக்கியநாதன்விளை கிழக்கு பகுதி | 20 அடி | 17 | ஊரகம் வடக்கு | 2 | 6 | 8 |
| 6 | மேல அலங்காரத்தட்டு | 20 அடி | 17 | | 2 | 4 | 6 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | குரூஸ்புரம் பண்டுகரை ரோடு (St. ஜோசப் பள்ளி வடபகுதி) | 60 அடி | 22 | வடக்கு | 2 | 4 | 6 |
| | மொத்த விளக்குகளின் எண்ணிக்கை | | | | 12 | 33 | 45 |
| | **அலுவலகக் குறிப்பு**<br>1) பொதுமக்கள் நலன் கருதி மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>2) இப்பணிக்கு தேவைப்படும் LED விளக்கு பொருத்திகளை ஒப்பந்தப்புள்ளி கோரி பொருத்தும் பணிக்கு ஆகும் செலவினம் ரூ. 2.85 இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.04355/2021/இ3) | | | | | | |
| | 8)இம்மாநகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவின் மூலம் கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் முதிர் கொசுக்களை ஒழிக்க VEHICLE MOUNTED FOGGING MACHINE மூலம் இம்மாநகராட்சி அனைத்து வார்டுகளிலும் OUTDOOR மற்றும் INDOOR வகைக்கு பயன்படுத்தப்படும் பைரித்திரம் (PYRETHRUM 2% EXTRACT)என்ற மருந்தினைTNMSC அனுமதி பெற்ற M/s. Paramount Pesticides Limited நிறுவனத்தின் மூலம் 1 லிட்டர் ரூ. 1100/– (Plus GST @ 18% Rs. 198 = Rs. 1298/-) வீதம் 1000 லிட்டர் கொள்முதல் செய்வதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ. 13,00,000/–னை (ரூபாய் பதிமூன்று இலட்சம்) இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/04086/2021 | | | | | | 89) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 9) இம்மாநகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவின் மூலம் கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் கழிவு நீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் BT(Bacillus Thuringiensis Var. Israelensis 5 % WP Stain) என்கிற மருந்தினை கொள்முதல் செய்வதற்கு TNMSC அனுமதி பெற்ற M/s. Ajay Bio –Tech(India)Ltd. Pune நிறுவனத்தின் மூலம் 1 கிலோ ரூ. 1047/– (Plus GST @ 12% Rs. 125.64 = Rs. 1172.64/-) வீதம் 1000 கிலோ வாங்குவதற்காகும் செலவுத் தொகை ரூ. 12,00,000/– னை (ரூபாய் பன்னிரண்டு இலட்சம்) இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/01824/2021 | | | | | | 90) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 29–09–2021

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி